தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

**8 வயதுப்பிரிவு**
(01.01.2015 – 31.12.2015 வரையில் பிறந்தோர்)

## நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி

“போரை நிறுத்து; புலிகளோடு பேசு” என்ற கோரிக்கையோடு அறப்போர் தொடுத்தவர் அன்னை பூபதி. இந்தியப் படையினர் தமிழீழ மண்ணில் கால் பதித்து, தமிழினத்துக்குச் செய்த அநீதியை எதிர்த்து, அவர்களின் முகத்திரையைக் கிழித்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தடை உடைக்க உண்ணா நோன்பிருந்து உயிர்க்கொடை தந்தார்.

அவரது அறப்போர் ஒரு சாதாரண தாயின் துணிவையும் தேசியப் பற்றுணர்வையும் பறைசாற்றுகிறது. இனத்தின் குரலாக, அவர் ஒரு வல்லரசை எதிர்த்தார். நீதியின் நெருப்பில் தன்னை எரித்து அநீதிக்குச் சவால் விடுத்தார். தனித்துவமான, காலத்தால் அழியாத சரித்திரத்தைப் படைத்தார். அவரது உயரிய தியாகத்துக்கு மதிப்பளித்து, அவர் சாவினைத் தழுவிக்கொண்ட ஏப்ரல் பத்தொன்பதாம் நாள் தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாளாகத் தலைவர் மாமாவால் அறிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் உயிர்க்கொடை தந்த நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் தியாகச்சாவும் ஆயிரமாயிரமாய் களப்பலியான மாவீரர் தியாகமும் ஒருபோதும் வீண்போகாது. அன்னை பூபதியின் முப்பத்தைந்தாம் ஆண்டு நினைவோடு உறுதியெடுக்கிறோம். தமிழீழத் தாய்நாட்டின் விடுதலைக்கு வலுச்சேர்ப்போம்.

நன்றி,

வணக்கம்.